பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 01 | வியாழக்கிழமை | 15.02.2024 | அதிர்வு 198

## சுகாதாரத்துறையினரின் வேலைநிறுத்தம் முடிவுக்கு

வைத்தியர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட 35 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவுக்கு நிகரான மேலதிக கொடுப்பனவைத் தமக்கும் பெற்றுத் தருமாறு கோரி, 72 சுகாதார சேவை தொழிற்சங்கங்களால் நேற்றுமுன்தினம்

06 ▶



# தேவைப்படின் கட்சி நிர்வாகிகளை தேர்தல் நடத்தித் தேர்ந்தெடுங்கள்!

## தமிழரசின் தலைவர் சிறீதரனுக்கு சம்பந்தன் இப்படி அறிவுறுத்தல்

(சீ.ஏ. தமிழ்மாறன்)

‘இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச் சபை அங்கீகரிக்காதவிடத்து அல்லது அந்தத் தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து,தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்துங்கள். அன்றைய தினமே மாநாட்டையும் நடத்தி முடியுங்கள்!”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேரடியாக அறிவுறுத்தியுள்ளார்.

06 ▶

## யாழில் நேற்று கோர விபத்து தந்தையும், குழந்தையும் பலி

### தாய் உட்பட மூவர் படுகாயம்



(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)



தமிழரசுக் கட்சியின் பழைய பிரமுகர்களுள் அவரும் ஒருவர். திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். நேற்று மதியம் திடீரென அழைப்பு எடுத்தார். எடுத்த எடுப்பில் என் மீது சீறி விழுந்தார். அப்படியையும் உரிமை அவருக்கு உள்ளது. கோபத்துடன் கடிவது அவர் வழமை.

“ஒரு மாதிரி தமிழரசு நிர்வாகிகள் தெரிவு சுமுகமாக முடியும் அறிகுறி தென்படுகின்றது. அதை நீ விடமாட்டாய் போல.

06 ▶





## யாழில் ரயிலுடன் வான் மோதி கோர விபத்து

# தந்தையும், குழந்தையும் பலி! தாய் உட்பட மூவர் படுகாயம்!!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் ரயிலுடன் ஹயஸ் வான் மோதி விபத்துக்குள்ளானதில் தந்தையும், 6 மாதப் பெண் குழந்தையும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். தாய் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வானில் சென்ற இணுவில் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சயந்தன் மற்றும் அவரது மகளான அப்சரா என்ற 6 மாதக் குழந்தை ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

வானில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த குழந்தையின் தாயாரான 22 வயதுடைய பிரியங்கா என்ற பெண் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து இடம்பெற்ற வேளை அந்த இடத்தில் ரயில் கடவை காப்பாளர் நிற்கவில்லை என்றும், அவர் இல்லாததே விபத்துக்குக் காரணம் என்றும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.
















# சஜித்துக்கான ஆதரவை உடன்படிக்கை மூலம் உறுதிப்படுத்தியது தமிழ் முற்போக்குக் கூட்டணி

ஜனாதிபதித் தேர்தலில் தமது கூட்டணியின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கே என்பதைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டணியில் பிரதான பங்காளிக் கட்சியாக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையில் இது தொடர்பில் எதிர்க்கட்சியின் தலைமையகத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடுதலையை இலக்காகக் கொண்டே குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான காணி உரிமை மற்றும் அவர்களைச் சிறுதோட்ட உரிமையாளர்களாக்குதல் போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மலையகத் தமிழர்களின் அபிலாஷைகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி செயலணியொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்கான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளதுடன், பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி வழங்க அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி 10 ஆயிரம் வீட்டு திட்டமும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மலையகத் தமிழர்கள் தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியும் உறுதிப்படுத்தலொன்றை வழங்கியுள்ளது.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஆதரவு யாருக்கு? இறுதி நேரத்தில் ரணிலிடம் கூட்டணி சரணடையுமா? என்றெல்லாம்கூட ஊகங்கள் வெளியிடப்பட்டு வந்தன.


இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் சஜித்துக்கான ஆதரவைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த உடன்படிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் முற்போக்குக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., தேசிய தொழிலாளர் முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி, மலையக மக்கள் முன்னனணி தலைவர் வி.இராதாகிருஷ்ணன் எம்.பி. மற்றும் எம்.வேலுகுமார் எம்.பி., எம்.உதயகுமார் எம்.பி., சுஜித் சஞ்சய பெரேரா, ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

(சஜித்தின் கருத்து 12ஆம் பக்கத்தில்...)









# அரச பல்கலைக்கழகங்களில் பல்துறை பட்டங்களை வழங்குவதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தகவல்



"கல்வியில் சர்வதேச அனுபவமுள்ள நிபுணர்களின் அவதானத்திற்குப் பின்னர் அரச பல்கலைக்கழகங்கள் மூலம் பல்துறைப் பட்டங்களை வழங்குவதில் கவனம் செலுத்தியுள்ளோம். இலங்கையில் 03 சர்வதேச பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"03 சர்வதேச பல்கலைக்கழகங்களை இலங்கையில் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இவற்றில் இரண்டு பல்கலைக்கழகங்கள் ஆரம்பிப்பதற்கான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மே மாதத்திற்குள் மூன்றாவது பல்கலைக்கழகமும் இலங்கையில் ஸ்தாபிக்கப்படும்.

கண்டியில் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஏனைய இரண்டு பல்கலைக்கழகங்களும் அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்தை மையமாகக் கொண்டு அவற்றின் இரண்டு கிளைகள் திறக்கப்படவுள்ளன. அவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் தயாராக உள்ளோம்.

விஜயதாஸ ராஜபக்ஷ குழுவின் அறிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் குழு அறிக்கையை இணைத்து புதிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை ஆரம்பிப்பதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்கள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன. குழுவின் தலைவர் பதவிக்கு, முன்னாள் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவனை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான சட்டக் கட்டமைப்பு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டு, சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அரச பல்கலைக்கழகங்களில் பல்துறை பட்டங்களை வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு வருகை தருமாறு ஆஸ்திரேலிய உயர்கல்வி அமைச்சருக்கு ஆஸ்திரேலியத் தூதரகத்தின் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மெல்பேர்ன், சிட்னி பல்கலைக்கழகம் உட்பட 10 பல்கலைக் கழகங்களுடன் தொடர்புள்ள நிபுணத்துவ அறிவுள்ள வேந்தர்களும் இலங்கைக்கு வருகை தர உள்ளனர். எமது கல்வி நிலைமையை ஆய்வுசெய்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தனியார் உயர்கல்வித் துறையை முறைப்படுத்த வேண்டும். ஆனால் கல்வித்துறையை விற்பனை செய்வதற்கு நாம் தயாரில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்."

– என்றார்.

# எதிரணியின் பெரும்பாலானோர் அரசாங்கத்துடன் இணைவார்கள்

## பியல் நிஷாந்த டி சில்வா நம்பிக்கை

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை எவராலும் வீழ்த்த முடியாது. பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம். எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணைவார்கள்."

– இவ்வாறு கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் உள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசாங்கத்தை பொறுப்பேற்க தயார் என தற்போது குரல் எழுப்பும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க ஆகியோர் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த போது அரசாங்கத்தை பொறுப்பேற்க முன்வரவில்லை.

நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்தை பொறுப்பேற்றால் தமது எதிர்கால அரசியல் இருப்புக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அரசாங்கத்தை பொறுப்பேற்காமல் கதை பேசிக் கொண்டிருந்தார்கள்.

மாறுப்பட்ட அரசியல் கொள்கையினை கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்து அவர் தலைமையில் அரசாங்கத்தை ஸ்தாபித்தோம். அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்காமல் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்பட்டதால் நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப் பெற்றுள்ளோம்.



பொருளாதார பாதிப்பைத் தொடர்ந்து பொதுஜன பெரமுன வீழ்ச்சியடைந்து விட்டது என்று எதிர்க் கட்சியினர் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளார்கள். பொதுஜன பெரமுனவை எவராலும் வீழ்த்த முடியாது. பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

எதிர்க்கட்சித் தலைவருடன் ஒன்றிணைந்து செயற்பட முடியாது என்பதை எதிரணியின் உறுப்பினர்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளார்கள். எதிரணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணைவார்கள்."– என்றார்.





# நெல் கொள்வனவிற்கு கடன் திட்டம் அறிமுகம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, சிறு மற்றும் மத்திய தர அரிசி ஆலை உரிமையாளர்கள், நெற் களஞ்சியசாலை உரிமையாளர்கள், தொகை நெல் சேகரிப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்திக்கும் வகையில் இம்முறை பெரும்போகத்தின் போது நெல் கொள்வனவு செய்வதற்காக “மடபன“ கடன் திட்டத்தை செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பொதுமக்கள் அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னகோன் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினால் இந்தக் கடன் வசதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறு மற்றும் மத்திய தர அரிசி உற்பத்தி தொழில்துறையினர் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தரார்.

இந்த கடன் திட்டத்தின் கீழ், 09 பில்லியன் ரூபா கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபாவும், நெற் களஞ்சியசாலை உரிமையாளர்களுக்களுக்கும் தொகை நெல் சேகரிப்பாளர்களுக்கும் அதிகபட்சமாக 25 மில்லியன் ரூபா வரையிலும் கடனாக வழங்கப்படும்.

கடன் திருப்பிச் செலுத்த 180 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படும். 15 வீத வருட வட்டி விகிதத்தில் 4 வீதம் திரைசேறியினால் அந்தந்த வங்கிகளுக்கு வழங்கப்படும். அதன்படி, கடன் பெறுநர்கள் 11 வீதம் மட்டுமே வருட வட்டி செலுத்த வேண்டும்.

விவசாசியகளுக்கு நல்ல விலையைப் பெற்றுக்கொடுப்பதோடு, மக்களுக்கும் நியாயமான விலையில் அரிசியை பெற்றுக்கொடுப்பதே இக்கடன் திட்டத்தின் நோக்கமாகும் எனவும் ரஜித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் விவசாய அமைச்சும் மற்றும் ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் அகில இலங்கை அரிசி ஆலை தொழில்துறையினர் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்கனவே பொதுச் செயலாளர் பதவி குகதாசனுக்கு முதல் வருடம், சிறீநேசனுக்கு அடுத்த வருடம் என்று தீர்மானமாகிவிட்டது. வரும் திங்கள் கட்சியின் தேசிய மாநாடு சுமுகமாக நடக்கும் என்ற மாதிரி நீதானப்பா முதலில் செய்தி வெளியிட்டாய். வாசிக்க மன ஆறுதலாக இருந்தது. பிறகு நீயே திரும்பவும் இழுபறி, பிரிவு, பிளவு, குழப்பம், திங்கள் தேசிய மாநாட்டுக்கு முதல் நடைபெறும் பொதுக் குழுவில் மீண்டும் மோதல், முரண்பாடு வெடிக்கலாம் என்ற சாரப்பட உன் பத்தியில் பொடி வைத்து எழுதுகிறாய்... இது என்னப்பா வேலை?" என்று நியாயமாக – விசனத்துடன் கேட்டார் அவர்.

"ஐயா... முதலில் உடன்பாடு ஏற்பட்டது என்னவோ உண்மைதான். குகதாசன் முதல் வருடம் பொதுச் செயலாளர், அடுத்த வருடம் அந்தப் பதவி சிறீநேசனுக்கு என்ற சாரப்பட குகதாசன் – சிறீநேசன் – கட்சியின் புதிய தலைவர் சிறீதரன் ஆகிய மூவரும் ஒப்பமிட்டு, எழுத்தில் ஓர் உடன்பாட்டுக்குக் கூட வந்திருந்தார்கள். கடந்த ஞாயிறு வவுனியாவில் நடைபெற்ற பிரமுகர்கள் கூட்டத்தில்தான் இப்படி எழுத்தில் உடன்பாடு வரைந்து ஒப்பமிடும் அளவுக்கு இணக்கம் சுமுகமாக வந்தது. எனினும் அதன் பின்னர்தான் மீண்டும் குழப்பம். அதனைத் தான் நான் வெளிப்படுத்தினேன்" – என்றேன்.

அவருக்கு என் விளக்கம் திருப்தி தரவில்லை.

"என்னவோ... என் கருத்தைச் சொல்லிப் போட்டன். இப்படியே கட்சியை நாசமாக்கப் போறியள், துலைக்கப் போறியள்...!" – என்று வைத்தார் அவர்.

எழுத்தில் உடன்பாடு கண்டு, பதிந்து, ஒப்பமிட்ட பின்னரும் குழப்பநிலை நீடிக்கின்றது என்பது உண்மை.

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த கட்சியின் புதிய தலைவர் சிறீதரன் எம்.பி. மற்றும் சாள்ஸ் நிமலநாதன் எம்.பி. ஆகியோரிடம் கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தன் எம்.பி. கூறியவை என்று தெரிவித்து வெளியான கருத்துக்கள், திங்களன்று தேசிய மாநாட்டுக்கு முன்னர் மீண்டும் கட்சியின் பொதுச் சபை கூடும் போது குழப்பம் பண்ணி, திரும்பவும் தேர்தல் மூலமான தேர்வுக்கு வற்புறுத்துங்கள் என்று பொதுச்சபை உறுப்பினர்களைத் தூண்டி விடுவதாக உள்ளது என்பது அப்பட்டமாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் –

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை முதல் வருடம் திருகோணமலையின் குகதாசனுக்கு வழங்கக் கூடாது என்று நேரில் வற்புறுத்துவதற்காக திருமலை நவம்(நவரத்தினம்) உட்பட நான்கு பேர் அணி ஒன்று நேற்றுப் பிற்பகல் திருகோணமலையிலிருந்து வாகனம் ஒன்றில் விசேடமாக கிளிநொச்சிக்கு வந்து, சிறீதரனைச் சந்தித்து வற்புறுத்தியது. அப்படி வந்த நால்வரில் ஒருவர் பெண்.

கட்சித் தலைவர் சிறீதரனுக்கு ஒரு பொன்னாடையைப் போர்த்தி, அந்தக் குழு தெரிவித்த கருத்துக்களை செவிமடுத்த பின்னர், அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தார் சிறீதரன்.

இந்த நால்வர் அணியை திருகோணமலையிலிருந்து விசேட வாகனம் ஒழுங்குப்படுத்திக் கொடுத்து சிறீதரன் எம்.பியிடம் அனுப்பி வைத்தவர் சம்பந்தனின் மகன் சஞ்சய் என்று தெரிகின்றது.

ஆயினும் மட்டக்களப்புக் குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை,வவுனியாவில்பிரமுகர்கள் கூட்டத்தில், தலைவர் சிறீதரன் முன்னிலையில், இணக்கம் கண்ட விடயத்திலிருந்து – நிலைப்பாட்டில் இருந்து – விலக விரும்பவில்லை என்று அத்தரப்புகளுடன் நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன.

முதல் வருடம் பொதுச்செயலாளர் பதவி குகதாசனுக்கு வழங்கப்படுவதை மட்டக்களப்பு அணி இப்போது எதிர்க்கும் நிலையில் இல்லை. இது திருகோணமலையில் குகதாசனுக்கு எதிரான அதிருப்திக்குழு எடுக்கும் முயற்சி. அது, மட்டக்களப்புக் குழுவின் ஆதரவின்றி பிசுபிசுத்துப் போகும் சூழல்தான் காணப்படுகின்றது.

ஆனாலும் தேசிய மாநாட்டுக்கு குறைந்தது 21 நாள்கள் முன்னறிவித்தல் நோட்டீஸ் வழங்கப்பட வேண்டும் என்பது தமிழரசு கட்சி யாப்பின் விதிமுறை.

வரும் திங்கள் கூட்டப்படவிருக்கும் தேசிய மாநாட்டுக்கு நேற்று வரை யாருக்கும் அழைப்பு கிட்டவில்லை.

இது உட்பட பல்வேறு காரணங்களினால் வரும் திங்கள் மாநாடு கூட்டப்படுவதற்கு இடைஞ்சலும், மாவையின் மடியில் பொறுப்பு வீழ்வதற்குப் பலமான வாய்ப்பும் இருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது.

### சுமந்திரன் கூறியவை

".....வாக்கெடுப்பில் கலந்துகொண்ட பொதுச்சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட முறைகள், யாப்புக்கு முரணாக பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டமை சம்பந்தமாக பல நியாயமான கருத்துக்கள் வெளிப்பட்டாலும்,போட்டியாளன்என்றவகையிலே அந்த முடிவை நான் முழுமையாக, பகிரங்கமாக ஏற்றிருக்கின்றேன். இது எங்கே சவாலுக்குட்படுத்தப்பட்டாலும் இந்த முடிவு என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற என்னுடைய உறுதியான நிலைப்பாட்டை நான் தொடர்ந்தும் பேணுவேன் என்பதை மீளவும் எழுத்தில் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். பல குறை நிறைவுகளோடு ஒரு தேர்தல் நடைபெற்றாலும் அதில் பங்குபற்றிய பின்னர் தோல்வியுற்றதன் காரணமாக அந்த முறைமை தவறென்று சொல்லுகின்ற முன்னுக்குப் பின் முரணான செயலை நான் எப்போதும் செய்யமாட்டேன்."

– என்று அண்மையில் சிறீதரன் எம்.பிக்கு தாம் எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார் சுமந்திரன் எம்பி.

அந்த உறுதிமொழிப்படி கட்சியின் முன்னைய தலைவர் மாவை சேனாதிராஜா, பழைய பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம் ஆகியோருக்காகவும், அவரது தமிழரசுக் கட்சிக்காகவும், நடந்து முடிந்த தமிழரசுத் தலைவர் தெரிவு மற்றும் நடக்கப் போகும் தேசிய மாநாடு ஆகியவற்றுக்காகவும் சுமந்திரன் நீதிமன்றப் படி ஏற வேண்டியமை அடுத்து வரும் நாள்களில் வரலாம் என்று எனக்குத் தோன்றுகின்றது. ஓரிரு நாள் பொறுப் போமே....?

---

## சுகாதாரத்துறையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் இன்று காலை 6 மணியுடன் முடிவுறுத்த சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

சுகாதாரஅமைச்சருடன்எதிர்வரும்திங்கட்கிழமை முக்கிய பேச்சு நடத்தவிருப்பதால் இந்த முடிவு எட்டப்பட்டது என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

---

## தேவைப்படின் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"சூழ்ச்சிகளை முறியடித்து மாநாட்டை நடத்துக.! – சம்பந்தன் அறிவுறுத்தல்" – என்ற தலைப்பில் சிறீதரனின் ஊடகப் பிரிவு நேற்று மாலை வெளியிட்ட செய்திக் குறிப்பில் இந்த விடயம் அடங்கியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

உட்கட்சி ஜனநாயகத்தைச் சிதைக்கும் வகையில் நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடித்து, உடனடியாக மாநாட்டை நடத்துமாறு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகிய இருவரும் இணைந்து நேற்று (நேற்றுமுன்தினம்) கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளைப் பொதுச் சபை அங்கீகரிக்காதவிடத்து அல்லது அந்தத் தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து, தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்தி, அன்றைய தினமே மாநாட்டையும் நடாத்துமாறு அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. – என்றுள்ளது.

சிறீதரனின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனிடம் நாம் வினவிய போது,"சொல்ல வேண்டிய விடயங்களைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரனிடம் கூறிவிட்டேன். இனி அவர் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பார்" – என்று பதிலளித்தார்.





# பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தையடுத்து போதனாவில் விமானப் படையினர் கடமையில்

நாடளாவிய ரீதியில் நேற்று இரண்டாவது நாளாகவும் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரப் பணியாளர்களின் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் இடம்பெற்றது.

நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இலங்கை விமானப் படையினர், நோயாளர் உதவிப் பணிகளுக்காகக் கடமையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

72 சுகாதார தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்றுமுன்தினம் காலை 6.30 மணி முதல் தொடர் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# ஜே.வி.பி. முன்னிலையில் உள்ளதை தற்பொழுது ஏற்றுக்கொள்ள வேண்டும்

## உதய கம்மன்பில கூறுகிறார்



“மக்கள் விடுதலை முன்னணி கடந்த காலங்களை காட்டிலும் தற்போது முன்னிலையில் உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த முன்னேற்றத்தை ஏற்க கூடிய மனநிலையில் ஒருசில அரசியல் தரப்பினர் இல்லை.”

– இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் “மக்கள் விடுதலை முன்னணியின் முன்னேற்றம்“ தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் ஒருசில கருத்துக்கணிப்புக்கள் ஊடாக மக்கள் விடுதலை முன்னணி கட்சி என்ற ரீதியில் முன்னிலையில் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. எழுமாற்றாக எடுக்கப்படும் கருத்துக்கணிப்புக்களில் உண்மைத்தன்மை சந்தேகத்துக் குரியது.

தற்போதைய நிலையில் மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது முன்னிலையில் உள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அரசியலில் வங்குரோத்து நிலையடைந்துள்ளவர்கள் இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆனால் நாங்கள் உண்மையை ஏற்றுக்கொள்வோம்.

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குவதை விடவும் தேர்தலை பிற்போடுவதற்கான உள்ளக சூழ்ச்சிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானங்களுக்கு அமைய ஜனாதிபதி தேர்தலை பிற்போட முடியாது. ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கும், நாடாளுமன்றத்தின் பதவி காலத்தை நீடிப்பதற்கும் நாட்டு மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டார்கள் என்பதை ஜனாதிபதி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பட்டுத் தெளியும் அரசு

யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப்போக்குக் கொண்ட தென்னிலங்கை ஆட்சி பீடத்துக்கு சற்று ஞானம் பிறக்கத் தொடங்கி இருக்கின்றது போலும். உண்மை சுடத் தொடங்கியிருக்கின்றது போலும்.

யுத்தம் முடிந்த பின்னரும் இராணுவம் உட்பட முப்படைகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள பிரிவுகளுக்கும் பல்லாயிரம் கோடிகளை வருடம் தோறும் கொட்டிக் கொட்டிக் கொடுத்தது இலங்கை அரசு.

வங்குரோத்து அடையும் கட்டத்தை நாடு எட்டியும் கூட, படைக்கு ஆள் திரட்டும் தீவிரத்தை பேரினவாத வெறிப்போக்கு கொண்டவையாக அமைந்த ஆட்சித் தலைமைகள் நிறுத்தவே இல்லை.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் பாரம்பரியமாக இருந்து வரும் தமிழர் தேசத்தை முழுமையாக ஆக்கிரமித்து, கபளீகரம் செய்யும் பேரினவாத எண்ணத்துடன்தான் யுத்தம் முடிந்து ஒன்றரை தசாப்தங்கள் வரை படைத்தரப்புக்கு தங்கு தடையின்றி அள்ளிக் கொட்டிக் கொடுக்கும் வேலை முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் அதிக இராணுவ வீரர்களைக் கொண்ட முதன்மையான பத்து நாடுகளில் இலங்கையும் ஒன்று. இங்கு ஆயிரம் பிரஜைகளுக்கு 15 பேர்இராணுவத்தினர்.

தேசிய பாதுகாப்புக்கு அதிக நிதி என்ற பெயரில் பெருந்தொகை வளத்தைக் கொட்டிக் கொடுத்து, ஆக்கிரமிப்புப் படையை விஸ்தரித்த இலங்கை அரசு, இப்போது அதன் நேரடிப் பாதிப்பைப் பட்டு உணரத் தொடங்கியுள்ளது. இப்படிப் பாதுகாப்பு துறைக்கு நியாயமின்றி - முரண்பட்ட முறையில் - பெருந்தொகையை வருடம் தோறும் போட்டி போட்டுக் கொண்டு கொட்டிக் கொடுத்தமை நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை - பின்னடைவை - ஏற்படுத்தி விட்டது என்ற யதார்த்தம் ஆட்சி தலைமையை இப்போது சுடத் தொடங்கி இருப்பதால் அது இராணுவ செலவினம் குறித்து மறுபரிசீலனை செய்யும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, வங்கரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டுப் பிணையெடுக்கும் முயற்சியில் நேரடியாக உதவ முன் வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியம் கூட இப்படி அர்த்தமற்ற விதத்தில் நாட்டின் வளத்தைப் பாதுகாப்பு படைகளின் பெயரில் நாசமாக்குவதை குறைகூறித் தடுக்கும் விதத்திலான நிபந்தனைகளை விதித்திருக்கும் என்பது நிச்சயம்.

அதனாலோ என்னவோ முப்படைகளுக்கான ஆள்சேர்ப்பை நிறுத்தும் முடிவுக்கு இலங்கை அரசாங்கம் வந்திருக்கின்றது. 2030ஆம் ஆண்டளவில் ஆயுதப்படைகளில் உள்ளவர்களின் எண்ணிக்கையை குறைந்த மட்டத்தில் பேணும் தீர்மானங்களையும் அரசு எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த வருட இறுதிக்குள் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை 135,000 ஆக குறைக்கும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு 200,783 வீரர்கள் இராணுவத்தில் இருந்தனர். இந்த எண்ணிக்கை இப்போது 150,000 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்காக குறைத்து, இந்த ஆண்டுக்குள் 135,000 ஆகவும், 2030க்குள் 100,000 ஆகவும் பேண முடிவு செய்யப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன்தெரிவித்துள்ளார்.

2030 ஆம் ஆண்டிற்குள் ‘தொழில்நுட்ப ரீதியாகவும் தந்திரோபாய ரீதியாகவும் சமநிலையான பாதுகாப்புப் படையை உருவாக்குவதே இந்த நடவடிக்கையின் நோக்கம்’ என அவர் கூறியுள்ளார்.

2030 ஆம் ஆண்டளவில் இலங்கை விமானப்படை வீரர்கள் மற்றும் இலங்கை கடற்படை வீரர்களின் எண்ணிக்கையை தலா 35,000 ஆக பராமரிக்கவும் பாதுகாப்பு அமைச்சு எதிர்பார்க்கின்றதாம்.

இலங்கை இராணுவம் பொது ஆள்சேர்ப்புகளை நிறுத்தியுள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் அத்தியாவசிய பிரிவுகளுக்கு மாத்திரம் ஆள்சேர்ப்பு செய்து வருவதாகவும் மேலும் கூறப்பட்டது.

இந்த நடவடிக்கை சில மாதங்களில் சுமார் 35,000 இராணுவ வீரர்களைக் குறைக்க வழிவகுத்ததுள்ளது. அதே போல கடந்த ஆண்டில் இலங்கை விமானப்படையில் சுமார் 35,000 பணியாளர்கள் இருந்தனர். தற்போது 30,000 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 27,000 வீரர்களாக அதைப் பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையில் தற்போது 40,000 வீரர்கள் உள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் கயான் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

“கடற்படைக்கான ஆட்சேர்ப்பை தொடர்கிறோம். ஏனெனில் ஆள்சேர்ப்பு இல்லாமல் எங்களால் செயல்பட முடியாது. ஓய்வு பெறும் எண்ணிக்கைக்கும் ஆள்சேர்ப்பு எண்ணிக்கைக்கும் வித்தியாசம் உள்ளது.” - என்றார் அவர்.

கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக யுத்தம், தீவிரவாதத் தாக்குதல்கள் உட்பட பல்வேறு காரணிகளால் தேசிய பாதுகாப்புக்கே அதிகளவான நிதி ஒதுக்கீடுகள் இடம் பெற்றன. யுத்தம் முடிந்த பின்னரும் அந்த நிலைமை தொடர்ந்தது.

இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாக நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டது.

கண்ணை மூடிக்கொண்டு பாதுகாப்புத் துறைக்கு பெருமளவு செலவு செய்தமையினால் தேசிய பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கு நிதி ஒதுக்கப்படுவது குறைந்து நாட்டின் பொருளாதாரம் நலிவுற்றது.

இப்போது பட்டுத் தெளிந்திருக்கின்றது அரசு. அதனால்தான் இந்த மாற்றம்.




# டில்லியில் இரண்டாவது நாளாக விவசாயிகள் நேற்று போராட்டம்

## பொலிஸாரின் தாக்குதலில் 60 பேர் காயம்

இந்திய தலைநகர் டெல்லியில் இரண்டாவது நாளாக விவசாயிகள் போராட்டத்தை தொடர்ந்து வரும் நிலையில், பொலிஸாரின் தாக்குதலில் இதுவரை 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

விவசாய விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம், ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், பீஹார், கேரளா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த விவசாயிகள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மூன்று மாநிலங்களில் இருந்து டில்லிக்குள் நுழையும் எல்லைகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வீதிகளில் தடுப்புகள் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

போராட்டம் நடத்துவதற்காக டில்லி நோக்கி சென்ற பஞ்சாப் விவசாயிகள், ஹரியானா எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

தடையை மீறிச் செல்ல முயன்ற விவசாயிகள் மீது ட்ரோன் மூலம் பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம் நடத்தியுள்ளனர். மேலும் நீர்த்தாரை பிரயோகமும் இரப்பர் குண்டு தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

இதன்போது, 60 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் காயமடைந்தனர் என விவசாய சங்கங்கள் தெரிவித்துள்ளன.

விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவளித்த பஞ்சாப் மாநில அரசு, அவர்கள் ராஜ்புரா வீதியை கடக்க அனுமதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு சோனியா காந்தி வேட்புமனு தாக்கல்



காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற தலைவர் சோனியா காந்தி, ராஜஸ்தானில் நடைபெற உள்ள மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

ஜெய்ப்பூரில் இருந்து அவர் வேட்பு மனு தாக்கல் செய்த போது அவருடன் ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி வர்தா உடன் இருந்தனர்.

ராஜஸ்தானில் இருந்து ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி நிச்சயம் என்பதால் அந்தப் பதவிக்கு, சோனியா காந்தி வேட்பு மனு தாக்கல் செய்கிறார்.

ஐந்து முறை மக்களவை உறுப்பினராக பணியாற்றிய சோனியா காந்தி, முதல் முறையாக மாநிலங்ளவை உறுப்பினராக பதவி ஏற்க இருக்கிறார்.

கடந்த 1997 டிசம்பரில் சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். அவர் கட்சியில் சேர்ந்த சில மாதங்களில் காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசத்தின் அமேதி தொகுதியில் சோனியா காந்தி முதல்முறையாக போட்டியிட்டார். பின்னர் அவர் உத்தர பிரதேசத்தின் ரேபரேலி தொகுதிக்கு மாறினார்.

கடந்த மக்களவைத் தேர்தலிலும் ரேபரேலி தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய சோனியா காந்தி, எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் ரேபரேலியில் போட்டியிட மாட்டார் என்று கூறப்பட்டது. ராஜஸ்தானில் இருந்து அவர் மாநிலங்களவை எம்.பியாக தேர்வு செய்யப்படுவார் என்று தகவல்கள் வெளியான நிலையில் நேற்று அவர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

# அபுதாபியில் முதல் இந்து கோயிலை திறந்து வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி



ஐக்கிய அரபு ராச்சியம் சென்றுள்ள பிரதமர் மோடி அந்த நாட்டின் அபுதாபியில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள முதல் இந்து கோயிலை திறந்து வைத்தார்.

அப்போது இங்கும் அயோத்தியின் மகிழ்ச்சி பரவியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு பிரதமர் மோடி ஐக்கிய அரபு ராச்சியம் சென்றார். அப்போது அபுதாபியில் சுவாமி நாராயண் கோயில் கட்ட 27 ஏக்கர் நிலத்தை அந்த நாட்டு அரசு வழங்கியது. இதன்பிறகு கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பரில் கோயில் கட்டுமான பணி தொடங்கியது. 700 கோடி ரூபாயில் இந்த கோயில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், சுவாமி நாராயண் கோயில் நேற்று திறக்கப்பட்டது. இதில் பிரதமர் மோடி பங்கேற்று, கோயிலை திறந்து வைத்தார்.

# பாகிஸ்தான் பிரதமராகிறார் நவாஸ் ஷெரீபின் சகோதரர்



பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீஃப் பிரதமர் ஆவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திடீர் திருப்பமாக அவரது சகோதரர் ஷெபாஸ் ஷெரீப் பிரதமராக பொறுப்பேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசில் பிரதமர் பதவியை கோரப் போவதில்லை என்றும் ஆட்சியில் பங்கேற்காமல் வெளியில் இருந்து ஆதரவு தெரிவிப்பதாகவும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பிலாவல் பூட்டோ ஜர்தாரி அறிவித்தார்.

இதனையடுத்து, பாகிஸ்தானின் மூன்று முறை பிரதமரான நவாஸ் ஷெரீஃப் தான் மீண்டும் அந்த பொறுப்பை ஏற்பர் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், அவரது சகோதரரும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் – நவாஸ் கட்சியின் தலைவருமான ஷெபாஸ் ஷெரீஃப் புதிய பிரதமராகவும், நவாஸ் ஷெரீஃபின் மகள் மர்யம் நவாஸ் (வயது 50) பஞ்சாப் மாகாணத்தின் முதல்வராகவும் நியமிக்கப்படுவர்கள் என்று அவரது கட்சியின் செய்தித் தொடர்பாளர் மரியம் ஔரங்கசீப் நேற்று முன்தினம் நள்ளிரவு அறிவித்துள்ளார்.

முன்னதாக பாகிஸ்தானின் 23 ஆவது பிரதமராக ஷெபாஸ் ஷெரீஃப் 2022 ஏப்ரல் முதல் 2023 ஆகஸ்ட் வரையில் பதவி வகித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில், இராணுவத்தின் ஆதரவைப் பெற்ற பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீஃப் அதிக இடங்களைக் கைப்பற்றி 4 ஆவது முறையாக நாட்டின் பிரதமர்ஆவர்என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், முன்னாள் பிரதமரும், கிரிக்கெட் நட்சத்திரமுமான பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் தான் மிக அதிக தொகுதிகளைக் கைப்பற்றினர்.

ஊழல் மற்றும் இரகசியக் காப்புறுதி மீறல் வழக்கில் இம்ரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும், அவரது கட்சி தேர்தலில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டதுடன், கட்சின் கிரிக்கெட் மட்டை சின்னமும் முடக்கப்பட்டது.

இந்த சூழலிலும், நாடு முழுவதும் சுயேட்சையாகப் போட்டியிட்ட பி.ரி.ஐ. கட்சியினர் 101 இடங்களில் வெற்றி பெற்றனர்.

இராணுவத்தின் ஆதரவு இருந்தாலும், நவாஸ் ஷெரீஃபின் கட்சி 75 இடங்களை மட்டுமே பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பிலாவல் பூட்டோ ஜர்தாரியின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், அதிக இடங்களைக் கைப்பற்றியிருந்தாலும் நவாஸ் ஷெரீஃபின் கட்சியுடனோ, பி.பி.பி.கட்சியுடனோ இணைந்து ஆட்சியமைக்கப் போவதில்லை, எதிர்க்கட்சியாகவே செயற்படுவோம் என இம்ரான் கான் கூறிவிட்டார்.

புதிய கூட்டணி அரசை அமைப்பதற்காக நவாஸ் ஷெரீஃபின் கட்சி மற்றும் பி.பி.பி. கட்சிகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

336 இடங்களைக் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் ஆட்சியமைப்பதற்கு 169 இடங்கள் தேவை. மொத்த நாடாளுமன்ற இடங்களில் 266 இடங்களில் மட்டுமே நேரடி போட்டி நடைபெறும். எஞ்சிய 60 இடங்கள் மகளிருக்கும், 10 இடங்கள் சிறுபான்மையினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். 266 தொகுதிகளில் கிடைத்த இடங்களின் அடிப்படையில் கட்சிகளுக்கு இந்த 70 இடங்களும் ஒதுக்கப்படும்.

எனினும், இந்த தேர்தலில் பி.ரி.ஐ. கட்சி நேரடியாகப் போட்டியிடாததால், அதிக இடங்களை கைப்பற்றியும் அந்தக் கட்சிக்கு நியமன இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படாது. ஆனால் ஏனைய கட்சிகளுக்கு அந்த இடங்கள் கிடைக்கும். எனவே, பி.ரி.ஐ. அல்லாத ஏனைய கட்சிகளுடன் இணைந்து நவாஸ் ஷெரீஃபின் கட்சி மற்றும் பி.பி.பி. கட்சியால் ஆட்சியமைக்க முடியும்.

# வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை!





வடகொரியா, வடகிழக்குக் கடற்பகுதியில் ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்டு வருவதாக தென் கொரிய இராணுவம் குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன், வடகொரியாவினால் வீசப்பட்ட ஏவுகணைகள் கிழக்கு கடற்கரை நகரமான பொன்சானில் கண்டறியப்பட்டுள்ளதாகவும், இது குறித்து அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து தாம் ஆய்வு செய்து வருவதாகவும் தென் கொரியா தெரிவித்துள்ளது.

எனினும் எத்தனை ஏவுகணைகள் வீசப்பட்டன? அவை எவ்வளவு தூரம் பறந்தன போன்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

அண்மையில், “எந்த நேரத்தில் வேண்டுமானாலும் தென்கொரியாவுக்கு எதிரான போருக்கு தாம் தயாராக இருக்கவேண்டும்” என தமது பாதுகாப்புப் படையிடம் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெருந்தோட்ட சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்து!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மகிழ்ச்சி

"மலையக, தென் பகுதி பெருந்தோட்ட சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ்வாறானவர்களுடன் இப்படியான சமூக ஒப்பந்தத்தை எட்டியதில் மகிழ்ச்சியடைகின்றேன்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைமை அலுவலகத்தில், மலையக, தென்பகுதி பெருந்தோட்ட சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உறுதிமொழியை வழங்கி, பல்வேறு தோட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதிகளுடன், சமூக உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட வேளையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டுக்குப் பெரும் வளமாகக் காணப்படும் மலையக மற்றும் தென் பகுதி தோட்டச் சமூகத்தினரின் வாழ்க்கை, வாழ்வாதாரம், ஜீவனோபாயம் உள்ளிட்ட சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக மலையகம் மற்றும் தென் பகுதி பெருந்தோட்டத்துறையில் உள்ள சமூகத்துடன் இன்று (நேற்று) ஒரு முக்கியமான சமூக உடன்படிக்கையை மேற்கொள்ள முடிந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி அரசின் கீழ் இதற்கென தனியான ஜனாதிபதி செயலகம் ஸ்தாபிக்கப்பட்டு, மலையக மற்றும் தென் பகுதி தோட்ட சமூகத்தினர் எதிர்நோக்கும் பொருளாதார,சமூக ரீதியான அபிவிருத்தி மற்றும் அரசியல் பிரச்சினைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புத் துறையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் இணக்கப்பாட்டுடன் உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

இலட்சக்கணக்கான மலையக மற்றும் தென் பகுதி பெருந்தோட்ட சமூகங்கள் நாட்டின் உயிர்நாடிக்கு பங்களித்து வருவதால், அவர்களை எப்போதும் கூலித்தொழிலாளிகளாகவே வைத்திருக்காது, அவர்களுக்கு பயிர்ச்செய்கை நில உரிமை மற்றும் வீட்டுரிமைகளை வழங்குவதோடு, பெருந்தோட்டத் துறையில் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர்களாக பணியாற்றும் பெரும் வாய்ப்பும் இதன் மூலம் உருவாகும்.

இது வரை இரண்டாம், மூன்றாம் வகுப்பினர் எனும் கவனிப்பாரற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்த இந்தச் சமூகத்துக்கு வார்த்தைகளோடு மட்டுப்பட்ட கோஷங்களைக் கடந்து, ஒரு குறித்த காலக்கெடுவுக்கு உட்பட்ட வகையில், இந்த மக்களை வலுவூட்ட, தெளிவான சமூக இணக்கப்பாட்டை எட்டியுள்ளோம்." – என்றார்.

# எங்கள் வீட்டுப் பிள்ளையே சஜித் எந்நேரமும் தாய் வீடு திரும்பலாம்

## ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு



"சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியில் வளர்ந்த பிள்ளை. அவர் எந்நேரத்தில் வேண்டுமானாலும் தாய் வீடு திரும்பலாம்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தி என்பது தற்போது இராணுவ முகமாக மாறி வருகின்றது. ஓய்வுபெற்ற – ஒதுக்கப்பட்டவர்கள் அக்கட்சியில் இணைந்து வருகின்றனர். இதனால் சஜித்தின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

தற்போதுகூட ஒன்றுமில்லை, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறியவர்கள் தாய் வீடு திரும்பலாம். சஜித் பிரேமதாஸ ஐ.தே.கவில் வளர்ந்தவர். அவரும் எந்நேரத்திலும் வரலாம்.

அதேவேளை, உரிய காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். அதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார். சஜித்தவோ, அநுரவோ எமக்குச் சவால் அல்ல." – என்றார்.



# பிமல் ரத்நாயக்கா – சிறீகாந்தா நேற்று யாழில் சந்தித்துப் பேச்சு



தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பியின்) பிரமுகரும் முன்னாள் எம்.பியுமான பிமல் ரத்நாயக்கா நேற்று யாழ். வந்திருந்தார்.

அக்கட்சியின் அழைப்பின் பேரில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என். சிறீகாந்தா யாழ்ப்பாணத்தில் உள்ள ஜே.வி.பியினரின் கட்சி அலுவலகத்தில் பிமல் ரத்நாயக்கவைச் சந்தித்துப் பேசினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான கலந்துரையாடல் உட்பட பல முக்கிய விடயங்களை அவர்கள் பேசினார்கள் என்று அறிய வந்தது.


ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

இணையவழிக் கலந்துரையாடல்



நாள் : 16 பிப்ரவரி வெள்ளிக்கிழமை 2024
நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)

நாள் : 17 பிப்ரவரி சனிக்கிழமை 2024
நேரம் : காலை 1:00 - 3:00 மணி (இலண்டன்)
காலை 6:30 - 8:30 மணி (இலங்கை, இந்திய)
பிற்பகல் 12:00 - 2:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)

“அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கியம்”

உரை நிகழ்த்துபவர் : எழுத்தாளர் லெ.முருகபூபதி

Zoom ID: 84777257162 Passcode: 554268




# மோட்டார் சைக்கிளை முட்டி தள்ளி காணிக்குள் புகுந்தது அரச பேருந்து

முன்னால் திரும்பிய மோட்டார் சைக்கிளை முட்டி தள்ளி வீதியை விட்டு விலகி காணிக்குள் புகுந்தது அரச பேருந்து.

யாழ்ப்பாணம் தென்மராட்சி – ஏ 9 வீதி, நாவற்குழி பகுதியில் இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4.15 மணியளவில் இடம்பெற்றது.

ஏ9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் திரும்ப முற்பட்டபோது பின்னால் பயணித்த அரச பஸ் அதனை முட்டி தள்ளியதோடு பாதையை விட்டு விலகி காணிக்குள் புகுந்துள்ளது.

இதன் போது மோட்டார் சைக்கிளுக்கு சேதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அதில் பயணித்த இருவருக்கும் தெய்வாதீனமாக காயங்கள் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.





# கிராம உத்தியோகத்தர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வுகள் அடுத்த வாரத்தில்

புதிதாக கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வுகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன என உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.


அதற்கமைய, 2,100 கிராம உத்தியோகத்தர்கள் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில் அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய நேர்முகத் தேர்வுகளுக்கான




அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என அஷோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது சுமார் 2 ஆயிரத்து 800 கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.





# போதை மாத்திரைகளுடன் மன்னாரில் இருவர் கைது!

(மன்னார் நிருபர்)

இலங்கைக் கடற்படை மற்றும் மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் மூலம் 1472 Pregabalin போதை மாத்திரைகளுடன் 02 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். ஓர் ஓட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் மன்னார் நகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வடமேற்குக் கடற்படைக் கட்டளையினால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் வடமத்திய கடற்படை கட்டளையில் உள்ள கஜபா மற்றும் மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் மன்னார் உப்புக்குளம் பகுதியில் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்த நடவடிக்கையில் 20 Pregabalin கேப்சூல்கள் வைத்திருந்ததற்காக ஒருவர் கைது செய்யப்பட்டார்.



சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் பின்னர் அதே பகுதியில் மீண்டும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போது ஒரு வீட்டில் இருந்து 1432 Pregabalin காப்ஸ்யூல்கள் மற்றும் ஓட்டோ ஒன்றில் இருந்து அதே மருந்தின் 20 காப்ஸ்யூல்கள் உடன் மேலும் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சிலாவத்துறை மற்றும் மன்னார் பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 29 வயதுடையவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் மருந்து மாத்திரைகள் மற்றும் ஓட்டோவுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# இணையவழிப் பாதுகாப்பு சட்டம் தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தக் கோரிக்கை

## சமந்தா பவர் வேண்டுகோள்

இணையவழிப் பாதுகாப்புச் சட்டத்தின் ஊடாக பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கு ஏற்படும் அழுத்தம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனத்தின் நிர்வாகி சமந்தா பவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பேச்சு சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டுமென்பதில் அமெரிக்கா உறுதியாக இருப்பதாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இணைய செயற்பாடுகளுக்கு கட்டுப்பாடு விதித்து இலங்கை மேற்கொண்டுள்ள சட்டத் திருத்தம் காரணமாக சர்வதேச சமூக வலைத்தள நிறுவ



னங்கள் குற்றவியல் வழக்குகளுக்கு உட்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இணையவழி பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய ஒரு மாதம் தேவை

## நீதி அமைச்சு அறிவிப்பு

இணையவழி பாதுகாப்பு சட்டத்தில் புதிய திருத்தங்களை உள்ளடக்க மேலும் ஒரு மாத காலம் தேவைப்படுவதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் உரிய திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படுமென நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் முன்வைத்த பிரேரணையின் பிரகாரம், நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் 30 இற்கும் மேற்பட்ட திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.



பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடக வலையமைப்புகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்தத் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனப் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அண்மைய நாள்களில் பல தரப்பினரும் இந்தச் சட்டத்தின் பல பிரிவுகளை விமர்சித்திருந்தனர்.

எனினும் பெப்ரவரி முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.



# கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத் திருவிழா பெப்ரவரி 23 இல் கொடியேற்றத்துடன் நடைபெறும்

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பெப்ரவரி 23 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொடியேற்றமும் திருச்செபமாலையும் திருச்சிலுவை பாதை தியானமும் நற்கருணை திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் புனிதரின் திருச்சிலுவை பவனியும் இடம்பெறவுள்ளன.


பெப்ரவரி 24 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் பீ.ஏ. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய பரிபாலகர் அருட்தந்தை பரமதாஸ் பத்திநாதன் தெரிவித்தார்.

23 ஆம் திகதி யாழ். பஸ் நிலையத்திலிருந்து பஸ்கள் சேவைகள் காலை 5 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் இறுதி பஸ் காலை 10 மணிக்கு புறப்படும் எனவும் அருட்தந்தை பரமதாஸ் பத்திநாதன் குறிப்பிட்டார்.

குறிகட்டுவானிலிருந்து கச்சதீவுக்கும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்கும் படகுக் கட்டணமாக ஒரு வழி பயணத்திற்கு ஒருவருக்கு 1,500 ரூபா அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை, கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவிற்கு சுமார் 8 ஆயிரம் பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்ப்பதாக கடற்படை ஊடகப்பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

மேலும் தற்காலிக இறங்குதுறை, மருத்துவ முகாம், வீதி புனரமைப்பு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உலகத்துடன் பொருந்தக்கூடிய புதிய கல்வி முறைமை அவசியம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தல்

"நாட்டைப் பொருளாதார மாற்றத்திற்கு இட்டுச்செல்ல வேண்டுமாயின், உலகத்துடன் பொருந்தக்கூடிய புதிய கல்வி முறைமை அவசியம். நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க வெளிநாடுகளுக்கு சென்று யாசகம் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. மாணவர்களுக்கு நாட்டில் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கவே அதனைச் செய்தோம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியில் நேற்றுப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான இலவசப் பாடசாலைப் பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலைச் சீருடைகள் வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"எனது வீட்டிற்கு அருகில் ஐந்து பாடசாலைகள் உள்ளன. நான் கற்ற றோயல் கல்லூரி மற்றும் தேர்ஸ்டன் கல்லூரி, மகளிர் கல்லூரி, மகாநாம கல்லூரி மற்றும் புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி என்பனவே அவை. அதனால் எனக்கு கல்வித்துறையில் அதிக கவனம் செலுத்த முடிந்துள்ளது. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் ஆட்சிக் காலத்தில் இப்பாடசாலைகளின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தினோம்.

2022 இல் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியால், கல்வித் துறை மட்டுமல்ல, அனைத்துத் துறைகளும் சரிவைச் சந்தித்தன. பாடசாலைப் பாடப்புத்தகங்கள், சீருடைகளை வழங்க முடியவில்லை. அந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க எந்தத் தலைவரும் முன்வரவில்லை. அப்போது, சவாலை ஏற்று, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டத்தை ஆரம்பித்தேன்.

இந்தப் பொருளாதார வேலைத் திட்டத்தினால் இன்று நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மை பெற்று வருகின்றது. அதன்படி, பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்களை உரிய நேரத்தில் வழங்க அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. அதற்காக 14 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை செலவிடப்பட்டது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக நாட்டில் புதிய கல்வி முறையொன்றை உருவாக்க வேண்டும். உலகிற்கு பொருத்தமான தொழில் படையினை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். நாட்டில் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்துவதற்குக் கல்வி முறையை உலகிற்கு பொருத்தமான வகையில் மாற்றியமைக்க வேண்டும். அதன் மூலம் உலகிற்குத் தேவையான தொழில் படையினை உருவாக்க முடியும்.

அதனூடாக சர்வதேச சந்தையுடன் போட்டியிடும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கும். பரீட்சைகளின் சுமைகளைக் குறைத்து, ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பப் பாடங்களை கல்வி முறையில் உள்வாங்கி, தொழில் முறைகளுக்கு உகந்த சமூகத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். அதற்காக தொழில், தொழில்நுட்பக் கல்லூரிகளை உருவாக்கவும் எதிர்பார்க்கிறோம்.

நாம் எவரும் 2022 இல் இருந்த நிலைக்குச் செல்வதை விரும்பவில்லை. எரிவாயு, எரிபொருள் உணவு வரிசைகள் அற்ற சமூகமே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். எனவே அவ்வாறான யுகத்திற்குள் மீண்டும் நாடு செல்லாமலிருக்க வலுவான பொருளாதாரத்தை நாம் உருவாக்குவோம். வலுவான பொருளாதாரம் கொண்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்தினை நாம் ஆரம்பித்துள்ளோம்" – என்றார்.









# இந்திய - இலங்கை கூட்டாண்மை ஆரம்பம் பேச்சுக்காக உயர்மட்ட குழு இந்தியா பயணம்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில், இலங்கையின் பொதுத்துறையின் திறனை அதிகரிக்க இந்திய – இலங்கை கூட்டாண்மை வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் அண்மைய இந்தியா விஜயத்தின் போது, இரு நாட்டு மக்களின் நலனுக்காக இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை புதிய துறைகள் மூலம் வலுப்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். குறிப்பாக இரு நாட்டு மக்களிடையேயும் தொடர்புகளை மேம்படுத்துவது குறித்து முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது, இந்தியா சிவில் சேவைகளின் திறனைக் கட்டியெழுப்ப ஒரு பாரிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அரச துறையின் திறனைக் கட்டியெழுப்பும் இந்திய – இலங்கைக் கூட்டாண்மையானது இலங்கையில் அரச நிறுவனங்களின் கட்டமைப்பை மிகவும் புதுமையான முறையிலும் செயற்திறனுடனும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த வாய்ப்பளிக்கும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது..

இந்த திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான உயர்மட்ட பேச்சுக்கான இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் போரில் இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் லால், அண்மையில் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருடன் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையின் அரச சேவையில் பயனுள்ள மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக கண்காணிப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரச நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தும் முறை குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடல்களின் பலனாக, இலங்கையில் இருந்து உயர் மட்டக் குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று, பொருத்தமான திறன் மேம்பாட்டு ஒத்துழைப்புத் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனங்களுடன் மேலதிக கலந்துரையாடல்களை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க தலைமையில், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர், இலஞ்ச– ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவன பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இலங்கை முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் உள்ளிட்ட 14 அரச அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக் குழுவினர் பெப்ரவரி 12 முதல் 17 வரை இந்தியா நல்லாட்சி தேசிய மையத்தில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்கவுள் ளனர். இந்திய அரசினால் இதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் அளிக்கப்படுகிறது.

அதன்படி, இலங்கையில் 12 அரச நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் டிஜிட்டல் கொள்முதல் உள்ளிட்ட அரசின் பிரதான சேவைகளுக்காக டிஜிட்டல்மயமாக்கலை செயற்படுத்தல், புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அரச ஊழியர்களின் திறன் மேம்பாடு, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், முதலீட்டு வசதிகள் அளித்தல் மற்றும் உணவுகளின் நடுநிலையான விலைப் பொறிமுறை ஆகிய பிரிவுகளுடன் தொடர்புள்ள நிறுவனங்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

அரச சேவையின் மேம்பாட்டிற்கான அண்மைய முன் முயற்சிகள் மற்றும் பொருளாதார நலன் குறித்த இந்திய அரசு நிறுவனங்களால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட கொள்கை, நிறுவன மற்றும் செயல்பாட்டு மேம்பாடுகளின் மூலம் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் அறிந்து கொள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு நடவடிக்கை எடுக்கும்.

மேலும், நிலையான பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதோடு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் அரச நிறுவனங்களின் திறனை அதிகரிக்கவும், சம்பந்தப்பட்ட இந்திய நிறுவனங்களுடன் நிறுவக்கூடிய நிறுவன ஒத்துழைப்புகளை அடையாளம் காணவும் பிரதிநிதிகள் குழு எதிர்பார்க்கிறது.

இலங்கைப் பிரதிநிதிகள் குழு கலந்துரையாடல்களிலும் பங்கேற்க இருப்பதோடு, அவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர், ஆளணி தொடர்பான இராஜாங்க அமைச்சர், மக்கள் குறைகேள் அமைச்சர், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதமரின் செயலாளர், அமைச்சரவைச் செயலாளர் ஆகியோருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னர் மாணவருக்கு சிறந்த கல்வி வழங்கப்படுகிறது

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



"ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் கல்வித்துறையின் நான்கு பிரிவுகளை ஓர் அமைச்சின் கீழ் கொண்டு வந்து, மனித வளத்தை முகாமைத்துவம் செய்து, மாணவர்களுக்கு முறையான கல்வியை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தினார்."

– இவ்வாறு கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரியில் நேற்றுப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான இலவச பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இந்தத் தேசிய வேலைத்திட்டத்திற்கு இணையாக 09 மாகாணங்களின் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை சீருடை மற்றும் பாடப் புத்தங்கள் இன்று வழங்கப்படுகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் கல்வித்துறையின் நான்கு பிரிவுகளை ஓர் அமைச்சின் கீழ் கொண்டு வந்து, மனித வளத்தை முகாமைத்துவம் செய்து, மாணவர்களுக்கு முறையான கல்வியை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தினார்.

இன்று வழங்கப்படும் பாடசாலை சீருடையில் 80 வீதம் சீன அரசாங்கத்தின் அன்பளிப்பாகும். எஞ்சிய 20 வீதம் சதவீதம் இலங்கை அரசாங்கத்தின் செலவில் பெற்றுகொடுக்கப்பட்டது.

இந்திய கடன் உதவியில் கிடைத்த கடதாசியை கொண்டு பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. அதனால் உரிய தினத்தில் பாடப்புத்தங்களை அரசாங்கத்தினால் வழங்க முடிந்துள்ளது. அரச அச்சீட்டு பணிகளில் இலாபம் ஈட்டவும் முடிந்துள்ளது. அனைத்து பாடசாலைகளினதும் மாணவர்களுக்கும் சீருடை மற்றும் பாடப்புத்தகங்களை வழங்க அரசாங்கம் 19 பில்லியன்களை செல விடுகிறது.

கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக தாமதமாகி வரும் சாதாரண தர பரீட்சைகளை 2025 ஆம் ஆண்டிலிருந்து உரிய காலப்பகுதியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல் கல்வி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு ஜனாதிபதி பெரும் பங்களிப்பு வழங்குகிறார். உலகிற்கு பொருத்தமான வகையில் கல்வி முறையை மாற்றியமைக்க அவர் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார். இந்த அனைத்து வேலைத்திட்டத்துடனும் உலகை வெல்லக்கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்."

– என்றார்.

# மஸ்கெலியாவில் தனியார் பஸ்கள் சேவையில் இருந்து விலகியுள்ளன

(மஸ்கெலியா நிருபர்:செ.தி. பெருமாள்)

மஸ்கெலியாவில் அரச – தனியார் பஸ் சேவைத் தரப்புகள் இடையில் ஏற்பட்ட மோதல்களில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இம் மோதல் காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் சாரதியையும் நடத்துனரையும் கைது செய்யக் கோரிக்கை முன் வைத்து மஸ்கெலியா நகரில் இருந்து சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ் சேவைகள் அனைத்தும் நேற்று சேவையில் இருந்து விலகி கொண்டு உள்ளன.

இதனால் சாமிமலை, ஹட்டன், காட்மோர், நல்லதண்ணி மற்றும் ஏனைய இடங்களுக்கான தனியார் பஸ் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் பெரும் சிரமத்திற்க்கு உள்ளாகி வருகின்றனர்.

# வவுனியா மாவட்டத்தில் பதிவின்றி இயங்கிவரும் கிறிஸ்தவ சபைகளின் 81 ஆராதனைக் கூடங்கள்

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்டத்தில் 81 கிறிஸ்தவ சபைகளின் ஆராதனைக் கூடங்கள் இயங்குகின்ற போதும் அவை எவையும் பதிவு செய்யப்படவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பித்த தகவல் அறியும் சட்டத்தின் கீழான விண்ணப்பத்திற்கு வழங்கிய பதிலிலேயே இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வவுனியாவில் இதுவரை 432 சைவ ஆலயங்கள் பதிவில் உள்ளன. இதே போன்று றோமன் கத்தோலிக்க தேவாலயங்கள் 104 உள்ளன. அவற்றில் 96 தேவாலயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிறிஸ்தவ சபைகளின் 81 இடங்கள் உள்ளபோதும் அவை எவையும் பதிவு செய்யப்படவில்லை.

இதேநேரம் மாவட்டத்தில் 43 இஸ்லாமியப் பள்ளிவாசல்களில் 25 பள்ளிவாசல்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 18 பள்ளிவாசல்கள் பதிவு இன்றிக் காணப்படுகின்றன. இங்கே காணப்படும் 32 விகாரைகளில் 29 விகாரைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 15.02.2024




மகிழ்ச்சியான மனநிலையை வளர்த்துக் கொள்வது முக்கியம். கவலைப்படுவதையும் உணர்ச்சி வசப்படுதலையும் இன்று தவிர்க்க வேண்டும்.

இன்று வேலைப் பளு அதிகமாகக் காணப்படும். பணிகளில் திட்டமிடல் அவசியம். உண்மையான உழைப்பு வெற்றியைப் பெற்றுத் தரும்.

உணர்ச்சி வசப்படுதலை தவிர்ப்பதன் மூலம் உறவில் பாதிப்புகளை தவிர்க்கலாம். நட்பு முறையுடன் பழகினால் நல்ல புரிந்துணரவு வளரும்.

பணவரவு அதிகமாக காணப்படும். இன்று தேவையில்லாத செலவினங்களும் ஏற்படலாம். எனவே உங்களால் செலவை கட்டுப்படுத்த இயலாது.

உங்கள் துணையாரின் உடல் நிலை பற்றிய கவலைகள் ஏற்படலாம். மூக்கு வாய் தொண்டை சம்பந்தமான பிரச்சி னைகள் ஏற்படலாம்.




மன அழுத்தத்தை விரட்ட உற்சாகத்தை கடைப் பிடிக்க வேண்டிய நாள். இன்று கவனக்குறைவு ஏற்படலாம். எதையும் எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியிட அழுத்தம் காரணமாக பணியில் தொய்வு ஏற்படலாம். பொறுமையை கடைபிடிப்பதன் மூலம் திறமையாக பணிகளை கையா ளலாம்.

நட்புடன் பழகுவதன் மூலம் துணையாருடன் நல்லுறவு மேம்படும். அவரின் விருப்பப்படி செயல்படுவதன் மூலம் சந்தோஷம் கிட்டும்.

இன்று பணவரவு திருப்திகரமாக இல்லை. கூடுதல் செலவினங்கள் கவலையை ஏற்படுத்தும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளுமையான உணவுகளை தவிர்க்க வேண்டும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். நீங்கள் செய்யும் செயலை சரியாக முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் சரியானதாக இருக்கும்.

இன்று வேலையில் முன்னேற்றம் காணப்படுகின்றது. உங்களின் தனிப்பட்ட திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களின் நகைச்சுவை பேச்சால் உங்கள் துணை யாரை கவர்வீர்கள். ஆதனால் அன்யோன்யம் பெருகும்.

இன்று பணவரவு உற்சாகத்தைத் தரும். அதிக பணவரவால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக உள்ளது. ஆரோக்கியமான மன நிலையால் உங்கள் உடல் நிலை நன்கு பராமரிக்கப்படும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். முன்னேற்றமும் திருப்தியும் நிறைந்த நாளாக அமையும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

இன்று பணியிடத்தில் அமைதி நிலவும். உற்சாகத்துடனும் உடனுக்குடனும் வேலை செய்வீர்கள். அதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

இன்று நீங்கள் உங்கள் துணையாருடன் வெளியிடங் களுக்குச் செல்வீர்கள்.

இன்று பணவரவு காணப்படும். பணவரவு உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் சந்தோஷமான மனநிலை உங்களுக்கு ஆரோக்கியத்தை பெற்றுத் தரும். இன்று உங்கள் உடல் நிலையில் எந்தக் குறைபாடும் இருக்காது




இன்று யதார்த்தமாக செயல்பட வேண்டிய நாள். பெரிய எதிர்பார்ப்புக ளுடன் செயலாற்றாதீர்கள். ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

இன்று அதிக பணிச்சுமை காரண மாக பணியை திறம்பட செய்வதில் சில தடைகள் இருக்கும்.

கணவன் மனைவி இடையே உணர்ச்சி வசப்படாமல் செயலாற்ற வேண்டும். அதன் மூலம் நல்லுறவையும் மகிழ்ச்சியையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று கூடுதலாக செலவு செய்ய நேரிடலாம். எனவே இன்று செலவுகளை சமாளிப்பதில் சிறிது கஷ்டம் இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இல்லலை. மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் கவலைகளால் பாதிக்கப்படும் நாள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் நீங்கள் உணர்ச்சி வசப்படாமல் இருந்து அமைதி பெறலாம்.

சவால்களை எதிர்கொள்ளும் நாள். இன்று ஓய்வின்றி உழைக்க வேண்டியிருக்கும். நன்கு பணியாற்ற அட்டவணை அமைத்து பணியாற்றுங்கள்.

உங்கள் துணையாரிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதை தவிர்ப்பதன் மூலம நல்லுறவை வளர்க்கலாம்.

இன்று வீட்டுத் தேவைகளுக்காக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தேவைகள் அதிகரிக்கும். அதனால் செலவும் அதிகரிக்கும்.

தாயாரின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரிடும் அதனால் கூடுதல் செலவுகள் நேரலாம்.




இன்று உங்கள் முயற்சிகள் வெற்றி யடையும் நாள். உற்சாகத்துடன் காணப் படுவீர்கள். உங்கள் மனது நிறைந் திருக்கும் நாள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். உங்கள் பணியில் திருப்தி காண்பீர்கள். புதிய வாய்ப்புகள் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் பணிவான மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையாரை சந்தோஷப்படுத்துவீர்கள். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் பெருகும்.

பணவரவு திருப்திகரமாக அமையும். உங்கள் கடின உழைப்புக்கான போனஸ் அல்லது ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். உங்கள் சந்தோஷமான மனநிலை காரணமாக ஆரோக்கியம் மேம்படும்.




இன்று உங்கள் மனதில் நம்பிக்கை நிறைந்திருக்கும். இன்றைய நாளில் நீங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய முக்கியமான முடிவுகளை எடுக்க லாம். இன்று மேற்கொண்ட காரியங்கள் அனைத்தும் எளிதாக நடக்கும்.

மேற்கொண்ட பணிகளை சரியான நேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை எளிதாகச் செய்ய இயலும்.

உங்கள் துணையுடன் சந்தோஷமான தருணங்களை பகிரந்து கொள்வீர்கள். குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு விஷேத்தைப் பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு கிடைக்கும்.

இன்றைய நாள் ஆரோக்கியமான நாளாக உங்களுக்கு அமையும். சந்தோஷம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.02.2024




இன்று சில அசௌகரியங்கள் ஏற்படலாம். பொறுமையும் நேர்மறை எண்ணங்களும் இருந்தால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். திறமையாகச் செயல்பட அட்டவணையிட்டு திட்டமிடல் அவசியம்.

குடும்ப விஷயங்கள் காரணமாக கணவன் மனைவிக்குள் சச்சரவு ஏற்படும். எனினும் உங்கள் சரியான அனுகுமுறை மூலம் அதை தடுக்கலாம்.

கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம். உங்கள் தேவைகளை சந்திக்க சிறு கடன்களை வாங்க நேரிடலாம். தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்கலாம்.




இன்று மகிழ்ச்சியான மன நிலை இருக்கும். உங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றுவீர்கள் முக்கியமான முடிவுகள் எடுப்பதன் மூலம் நன்மை கிட்டும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள்.

உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பாராட்டுக்களை பெறுவதற்கான நல்ல வாய்ப்பு இன்று அமைந்துள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். நல்ல புரிந்துணர்வின் மூலம் நல்லுறவை வலுப்படுத்தலாம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் நன்கு பணம் சம்பாதிக்க இன்றைய நாள் மிகவும் அதிர்ஷ்டமான நாள். இன்று ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். மனதை சிந்தனையின்றி ஓய்வாக வைத்திருப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று யதார்த்தமாக இருக்க வேண்டிய நாள். உங்கள் காரியங்களை மேற்கொள்வதில் சில தடைகள் நேரலாம்.

அனுசரித்து போவதன் மூலம் திறம்பட பணியாற்ற முடியும். நன்கு திட்டமிட்டு செயல்பட்டால் உங்கள் திறமை அதிகரிக்கும்.

கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு இருக்கும். அது நல்லுறவை பாதிக்கும்

நிதிநிலைமை கவலை தரும் வகையில் இருக்கும். தேவையற்ற செலவுகள் குடும்பத்தில் ஏற்படும்.

உங்கள் உணவில் கவனமாக இருக்க வேண்டும். உணவு ஒவ்வாமை ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் உங்களுக்கு மிதமான பலன்களையே தரும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். இன்று நண்பர்கள் கூட உங்கள் விரோதிகளாக மாற வாய்ப்புண்டு.

இன்று கடமைகள் அதிகமாக காணப்படும். ஓய்வின்றி உழைக்க நேரலாம்.சிறந்த முறையில் பணியாற்ற நல்ல உத்தியைக் கையாளுங்கள்.

உங்கள் பாதுகாப்பு நிலைமை பற்றி உங்கள் துணையாருடன் விவாதிக்காதீர்கள். அதனால் உறவு பாதிக்கப்படும். மேலும் கருத்து வேறுபாடுகள் உருவாகலாம்.

இன்று பண வரவும் செலவும் கலந்து காணப்படுகின்றது. பணத்தை மிச்சப்படுத்திச் சேமிக்க வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் கால் வலியால் பாதிக்கப்படலாம். இறைவழிபாடு மற்றும் தியானம் நல்ல பலன்களைத் தரும்.

